

# 18

# அல் குர்ஆன் ஓதுவதன் சிறப்புகள்

அல் குர்ஆன் மனித இனத்துக்கு வழிகாட்டும் அல்லாஹ்வின் அருள் வாக்காகும். அது மனிதனை நேர்வழியின்பால் இட்டுச் செல்லுகின்றது. அவனது ஈருலக வாழ்வுக்கும் வழிகாட்டுகிறது. உள்ளத்திற்கு அமைதியை அள்ளித் தருகின்றது. வாழ்வில் பரகத்தை ஏற்படுத்துகின்றது. மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசுகின்றது. அளப்பரிய நன்மைகளைப் பெற்றுத் தருகின்றது. இந்த மகத்துவமிக்க அல் குர்ஆனுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன. அவற்றுள் அதனை ஓதுவதும் ஒன்றாகும். இனி நாம் அவ்வாறு அதனை ஓதுவதன் சிறப்புக்களை அறிந்து கொள்வோம்.

***''இந்தக் குர்ஆனை நன்கு திருத்தமாக ஓதுங்கள்.'' (73:4)***

***''அல் குர்ஆனில் உங்களுக்கு இயன்றளவு ஓதுங்கள்.'' (73: 20)***

*''நிச்சயமாக இந்தக் குர்ஆன் அல்லாஹ்வின் உறுதிமிக்க கயிறு; வழிகாட்டும் பேரொளி; பயன்மிகு சஞ்சீவி; அதனைப் பற்றிப் பிடிப்போருக்கு அது பாதுகாப்பளிக்கும்; அதனைப் பின்தொடர்வோருக்கு அது வெற்றியளிக்கும்; கோணலை அது சீராக்கும்; தவறுகளைச் சரிப்படுத்தும்; அதன் அற்புதங்கள் முடிந்துவிடப் போவதில்லை; திரும்பத் திரும்ப ஓதுவதால் அது பழைமை அடைவதுமில்லை. எனவே, அதனை நீங்கள் ஓதி வாருங்கள்.'' (அல்ஹாகிம்)*

மேற்சொன்ன அல் குர்ஆன், ஸுன்னாவின் வழிகாட்டல்கள் ஒவ்வொரு முஸ்லிமும் அல் குர்ஆனை ஓதி ஒழுக வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன.

பொதுவாக நல்லமல்கள் ஆரம்பம் - செயன்முறை - இறுதி என்ற அனைத்தும் நிகழ்வதன் மூலமே முழுமை பெறுகின்றன. உதாரணமாக தொழுகை தக்பீரதுல் இஹ்ராமில் ஆரம்பித்து பல செயன்முறைகளை உள்ளடக்கி ஸலாத்துடன் முடிவடைகின்றபோதே முழுமை பெறுகின்றது. ஆனால், திலாவதுல் குர்ஆனைப் பொறுத்தவரை அவ்வாறல்ல. அதன் ஓர் எழுத்தையேனும் ஓதுவது, ஒரு பகுதியை ஓதுவது, முழுமையாக ஓதுவது, மற்றும் செவிமடுப்பது, மனனமிடுவது முதலான ஒவ்வொரு செயலும் முழுமை பெற்ற நன்மை தரும் நற்செயல்களாகும்.

*''ஒருவர் அல்லாஹ்வின் வேதத்திலிருந்து ஓர் எழுத்தை ஓதினால் அதற்காக அவருக்கு ஒரு நன்மையுண்டு. அந்த ஒரு நன்மை அது போன்று பத்து நன்மைகளுக்குச் சமமாகும். 'அலிப் - லாம் - மீம் -' என்பது ஓர் எழுத்து என நான் கூறவில்லை. அலிப் ஓர் எழுத்து. லாம் ஓர் எழுத்து. மீம் ஓர் எழுத்து ஆகும்.'' (திர்மிதி)*

*''அல் குர்ஆனை உடையவர்களே! நீங்கள் அல் குர்ஆனைத் தலையணையாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். இரவிலும் பகலிலும் அதனை உரிய முறைப்படி ஓதுங்கள்; அதனைப் பரப்புங்கள்; அதனை இனிய குரலில் ஓதுங்கள்; அதன் கருத்துக்களைச் சிந்தித்து ஆராய்ச்சி செய்யுங்கள். அப்போது நீங்கள் வெற்றியடைவீர்கள். அதனுடைய நன்மைகளை (இவ்வுலகில்) பெற அவசரப்படாதீர்கள். நிச்சயமாக அதற்குரிய கூலி (மறுமையில்) உண்டு.'' (பைஹகி)*

எனவே, காலையிலும் மாலையிலும் இனிய குரலில் அல் குர்ஆனை ஓதுவதை வழக்கமாக்கிக் கொண்டு, அதனைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் அக்கறை செலுத்துவதன் மூலம் மறுமையில் நிறைவான கூலியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மறுமை நாளில் ஒவ்வொருவரும் தனது வெற்றி, தனது ஈடேற்றம் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பர். அங்கு எவரும் எவருக்காகவும் பரிந்து பேச முடியாது. ஆனால், அல் குர்ஆனோ அதனை ஓதியவருக்காக அந்நாளில் பரிந்து பேசும்.

*''நீங்கள் அல் குர்ஆனை ஓதுங்கள். ஏனெனில் அதை ஓதியவருக்கு அது மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசும்.'' (முஸ்லிம்)*

*''அல் குர்ஆன் ஓதுவதில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக என்னை திக்ர் செய்வதற்கும் என்னிடம் துஆ கேட்பதற்கும் அவகாசம் எவருக்குக் கிடைக்கவில்லையோ அவருக்கு துஆ கேட்பவர்கள் அனைவருக்கும் கொடுப்பதை விட அதிகமானதை நான் வழங்கிடுவேன்'' என்று அல்லாஹ் கூறுவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள். (திர்மிதி)*

*''அல் குர்ஆனில் நன்கு தேர்ச்சியடைந்தவர் கண்ணியமிக்க நல்லோர்களாகிய மலக்குகளுடன் இருப்பார்கள். மேலும் குர்ஆனைத் திக்கித் திக்கிச் சிரமப்பட்டு ஓதுபவர்களுக்கு இரண்டு மடங்கு நற்கூலிகள் இருக்கின்றன.'' (புகாரி)*

''(கியாமத்து நாளில்) குர்ஆன் உடையவரை நோக்கி குர்ஆனை ஓதிக் கொண்டே செல்வாயாக! சுவர்க்கத்தின் பதவிகளில் உயர்ந்து கொண்டே செல்வாயாக! உலகில் நீ குர்ஆனை நிறுத்தி நிறுத்தி ஓதியது போன்று ஓதுவாயாக! நீ ஓதி முடிக்கும் கடைசி ஆயத்தில்தான் உனது தங்குமிட மிருக்கிறது என்று கூறப்படும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

அல்லாஹ்வை நெருங்குவதற்கும் ஸகீனத்தை (உள அமைதி) அடைந்து கொள்வதற்கும், சுவனத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் ஒரு சிறந்த சாதனமாக அல் குர்ஆனை ஓதுவது அமைந்துள்ளது. மேலும் அது உள்ளத்தில் படிந்திருக்கும் கறைகளை நீக்கி, சுத்தப்படுத்தி பிரகாசிக்கவும் செய்கிறது.

இத்தகு சிறப்புக்களை அள்ளித்தரும் உயர்ந்த நற்செயலான அல் குர்ஆன் ஓதுவதை ஒரு முஸ்லிம் நாளாந்தம் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். காலையிலும் மாலையிலும் ஓதிவர வேண்டும். அதுவே அவரது ஈமானுக்கு ஓர் அடையாளமாகும்.

***''(நபியே!) நாம் வேதம் கொடுத்தவர்களில் எவர்கள் அதை ஓத வேண்டிய முறைப்படி (அறிந்து) ஓதுகிறார்களோ அவர்களே அல் குர்ஆன் ஆகிய இதனை விசுவாசிப்பவர்களாவர்.'' (2: 121)***

அல் குர்ஆனை ஓதுவதன் மூலம் எமது வீடுகள் இறையருளும் பரக்கத்தும் கொண்டதாக அமைகின்றன. அதனை ஓதாதபோது அது பாழடைந்த வீடு போலாகி வறுமையும் ஷைத்தானும் அங்கு குடிகொள்ளும்.

அல் குர்ஆனை ஓதாதிருப்பது அதனைப் புறக்கணிப்பதற்கு நிகராகும். இது பற்றி இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்விடம் முறையிடுவதை அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

***''என் இறைவனே! நிச்சயமாக என்னுடைய ஜனங்கள் இந்தக் குர்ஆனை முற்றிலும் வெறுத்துத் தள்ளி விட்டனர்.'' (25: 30)***



இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய சமூகத்தினர் இந்த குர்ஆனை வெறுத்து ஒதுக்கிப் புறக்கணித்துவிட்டனர் என்று அல்லாஹ்விடம் யாரைப் பற்றி முறையிடப்படுகின்றார்களோ அந்நிலைமையை விட்டும் நாம் விலகியிருக்க வேண்டும்.

**இதற்கொரு வழியாக அல் குர்ஆனை விசுவாசிப்பதோடு, அதன்மீது பற்றுவைத்து காலையிலும் மாலையிலும் அதனை அதிகம் ஓதுபவர்களாகவும் படிப்பவர்களாகவும் அதன் வழி நடப்பவர்களாகவும் நாம் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அதன் மூலமே நாம் ஈருலகிலும் வெற்றியடையலாம்.**

### பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்

تِلَاوَةٌ    سَكِيْنَةٌ

### பயிற்சி

**அ. பின்வருவனவற்றுக்குச் சரி பிழை கூறுக.**

1. அல் குர்ஆன் அதனை நம்பியவருக்கு மறுமையில் அல்லாஹ்விடம் பரிந்து பேசும். ( )
2. அல் குர்ஆனை திக்கித் திக்கி சிரமப்பட்டு ஓதுபவருக்குக் கூலி கிடைப்பதில்லை. ( )
3. அல் குர்ஆனை ஓதுபவர் ஸகீனத்தை அடைந்து கொள்வார். ( )
4. அலிப், லாம், மீம் என்று ஓதுவதன் மூலம் ஒருவர் பத்து நன்மைகளைப் பெற்றுக் கொள்வார். ( )
5. வெள்ளிக் கிழமை தினத்தில் ஸூரா கஹ்பை ஓதுவது நபிவழியாகும். ( )

**ஆ. பின்வருவனவற்றிற்குச் சுருக்கமான விடை தருக.**

1. அல் குர்ஆன் ஓதுவதன் மூலம் கிடைக்கும் மறுமைப் பயன்கள் இரண்டு குறிப்பிடுக.
2. அல் குர்ஆனை ஓதுவதன் சிறப்புக்களைக் குறிப்பிடும் இரண்டு ஹதீஸ்களைத் தருக.